**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

வணிக வழக்கு எண்.13/2025 எம்.சி.ஓ.பி.எண்.

எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | V.மகேஸ்வரன் | வட்டம் | : | ஈரோடு |
| த/பெ. | : | விஸ்வநாதன் | மாவட்டம் | : | ஈரோடு |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | நாராயணவலசு | வயது | : | 45 |

**வா.சா.1: முதல் விசாரணை**:-

நான் இவ்வழக்கின் 2-ம் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன்.

03.10.2012-ம் தேதியிட்ட M/s.விஷன் ஸ்டார் மார்க்கெட்டிங் கூட்டாண்மைப் பத்திர நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **வா.சா.ஆ.1** ஆகவும், 01.07.2017-ம் தேதியிட்ட சரக்கு மற்றும் சேவை வரி (GST) பதிவுச் சான்றிதழின் பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், 14.12.2021 வடி 26.08.2023-ம் தேதியிட்ட டேக்ஸ் இன்வாய்ஸ் ரசீதுகளின் அசல் (42 எண்ணிக்கைகள்) **வா.சா.ஆ.3** ஆகவும், 01.10.2024-ம் தேதியிட்ட M/s. **ஸ்ரீ** விஜயலட்சுமி பிரிண்டிங் மில்ஸ் நிறுவனத்தின் பேரேடு கணக்கு

அலுவலக நகல் **வா.சா.ஆ.**4 ஆகவும், 29.12.2023-ம் தேதியிட்ட வாதிகளின் 2023-2024 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரி தாக்கல் படிவத்தின் பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.**5 ஆகவும், 11.05.2024-ம் தேதியிட்ட பிரதிவாதிகளுக்கு வாதிகளின் வழக்குரைஞர் அனுப்பிய கேட்பு அறவிப்பு அலுவலக நகல் அஞ்சல் ரசீதுகளுடன் **வா.சா.ஆ.**6 ஆகவும், 15.05.2024-ம் தேதியிட்ட 1-ம் பிரதிவாதி அறிவிப்பு பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.**7 ஆகவும், 15.05.2024-ம் தேதியிட்ட 2-ம் பிரதிவாதி அறிவிப்பு பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.**8 ஆகவும், 15.05.2024-ம் தேதியிட்ட 3-ம் பிரதிவாதி அறிவிப்பு பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.**9 ஆகவும், 15.05.2024-ம் 4-ம் பிரதிவாதி அறிவிப்பு பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.**10 ஆகவும், 15.05.2024-ம் 1-ம் பிரதிவாதி அறிவிப்பு பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.**11 ஆகவும், 28.04.2024-ம் தேதியிட்ட ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்ட சமரச விண்ணப்பம் அலுவலக நகல் **வா.சா.ஆ.**12 ஆகவும், 29.08.2024-ம் தேதியிட்ட ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட சமரச தோல்வி அறிக்கை அசல் **வா.சா.ஆ.**13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**